


தமிழ்
# மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழன், அக்டோபர் 15, 2026 | இதழ் 185

## தமிழக ஆளுநராக அர்லேகர் நியமனம்: முதல்வர் விஜய் வாழ்த்து

சென்னை, 15 அக்டோபர் 2026: தமிழ்நாட்டின் ஆளுநராக ஆர்.என்.ரவி செயல்பட்டுவந்தார். கடந்த மார்ச் மாதம் அவர் மேற்குவங்க ஆளுநராக நியமிக்கப்பட்டார். இதை தொடர்ந்து கேரள ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் தமிழ்நாட்டின் பொறுப்பு ஆளுநராக நியமிக்கப்பட்டார். இவர் கடந்த 6 மாதங்களாக அர்லேகர் செயல்பட்டு வந்தார். இந்நிலையில், கேரள ஆளுநர் பொறுப்பில் இருந்து ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் விடுவிக்கப்பட்டு, தமிழ்நாடு ஆளுநராக நியமித்து ஜனாதிபதி திரவுபதி முர்மு உத்தரவிட்டார். கோவாவை சேர்ந்த இவர் 1989ல் பாஜவில் இணைந்தார். 2002 முதல் 2007 வரை கோவா சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றியுள்ளார். 2003 முதல் 2007 வரை கோவா மாநில பாஜ தலைவர்.

2012 முதல் 2017 வரை கோவா சபா நாயகராக பதவி வகித்துள்ளார். இமாச்சல பிரதேசம், பீகார் ஆளுநராகவும் பதவி




வகித்தவர். கடந்த ஆண்டு கேரள மாநிலத்தின் 23வது ஆளுநராக பதவியேற்றார். தமிழக ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள அர்லேகருக்கு முதல்வர் விஜய் வாழ்த்து தெரிவித்து வெளியிட்ட பதிவில், "தமிழ்நாட்டின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகருக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள். தமிழ்நாட்டின் வளர்ச்சி, மாநில உரிமைகள் மற்றும் தமிழக மக்களின் நலன் காக்கும் வகையில் தங்களின் பணி சிறக்க வாழ்த்துகள்" என தெரிவித்துள்ளார்.

## தீபாவளி பரிசு: 11 லட்சத்திற்கும் அதிகமான ரயில்வே ஊழியர்களுக்கு 78 நாள் போனஸ்: ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல்!

சென்னை 15, அக்டோபர் 2026: வரவிருக்கும் பண்டிகைக் காலத்தை யொட்டி, நாட்டின் முன்னணி ரயில்வே ஊழியர்களுக்கு ஒன்றிய அரசு தித்திப்பான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய அமைச்சரவை, தகுதி வாய்ந்த காப்பீடற்ற (non-gazetted) ரயில்வே பணியாளர்களுக்கு 78 நாட்களுக்கு இணையான ஊதியத்தை உற்பத்தித் திறன் போனஸாக (பிஎல்பி) வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

இதன் மூலம் சுமார் 11.41 லட்சம் ஊழியர்கள் நேரடி பயன் அடைவார்கள். இதற்காக அரசாங்கம் மொத்தம் ரூ. 2,009.61 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது.

முக்கிய அம்சங்கள்:

அதிகபட்ச போனஸ் தொகை: தகுதியுள்ள ஒவ்வொரு ஊழியருக்கும் அதிகபட்சமாக ரூ. 17,951 வரை போனஸாக வழங்கப்படும்.

யார் யாருக்கு கிடைக்கும்?: லோகோ பைலட்டுகள் (ரயில் ஓட்டுநர்கள்), ஸ்டேஷன் மாஸ்டர்கள், டிரைவர்கள், காவலாளிகள் (train guards), டிராக் மெயின்டெய்னர்




கள் (பாதை பராமரிப்பாளர்கள்), தொழில்நுட்ப வல்லுநர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் உள்ளிட்ட சி-பிரிவு ஊழியர்கள்.

போனஸ் வழங்குவதற்கான காரணம்: 2025-26 நிதி ஆண்டில் இந்திய ரயில்வே துறை மிகச் சிறப்பான சாதனைகளைப் படைத்துள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் சுமார் 1,670 மில்லியன் டன் சரக்குகள் மற்றும் கிட்டத்தட்ட 7.41 பில்லியன் பயணிகள் ரயில் மூலம் பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். ரயில்வே துறையின் இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருக்கும் ஊழியர்களின் கடின உழைப்பை கவுரவிக்கும் வகையிலும், அவர்களின் சேவையை ஊக்குவிக்கும் வகையிலும் இந்தத் தொகை வழங்கப்படுகிறது.

## சர்வதேச செலாவணி நிதியம், உலக வங்கி ஆகியவற்றின் வருடாந்திரக் கூட்டங்களில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பங்கேற்பு

சென்னை 15, அக்டோபர் 2026: சர்வதேச செலாவணி நிதியம், உலக வங்கி குழுமத்தின் வருடாந்திர கூட்டங்கள், ஜி20, ஜி7 நாடுகளின் நிதியமைச்சர்கள், மத்திய வங்கி ஆளுநர்களின் கூட்டங்களில் பங்கேற்பதற்காக, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் 2026 அக்டோபர் 14 முதல் 18 வரை தாய்லாந்தின் பாங்காக்கிற்கு அரசுமுறைப் பயணம் மேற்கொள்கிறார்.

அவரது இந்தப் பயணத்தின்போது, தற்போதைய பொருளாதார நிலைகள், நிதித்துறை சார்ந்த விவகாரங்கள் உள்ளிட்ட உலகளவில் முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார, நிதிப் பிரச்சினைகள் குறித்த பலதரப்பு கூட்டங்கள், கலந்துரையாடல் நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்கிறார்.

உலகளவில் பொருளாதார கண்ணோட்டம், சர்வதேச நிதி ஒத்துழைப்பு ஆகியவை குறித்த கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள இந்தக் கூட்டங்கள் வாய்ப்பளிக்கும்.

மேலும், தாய்லாந்து நாட்டின் துணைப் பிரதமரும், நியமைச்சருமான திரு எக்னிதி நிதிதான்பிரபாஸ், சுவிட்சர்லாந்து,



ஜப்பான், லக்சம்பர்க், பூட்டான், குராகோ ஆகிய நாடுகளின் நிதியமைச்சர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவும் திருமதி நிர்மலா சீதாராமன் திட்டமிட்டுள்ளார்.

## 10, 12ம் வகுப்பு பொதுத் தேர்வு அட்டவணை வெளியீடு அமைச்சர் ராஜ்மோகன் பேட்டி. தனியார் பள்ளிகள் விடுமுறை நாட்களில் வகுப்பு நடத்தினால் கடும் நடவடிக்கை

சென்னை, 15 அக்டோபர் 2026: ஒவ்வொரு ஆண்டும் எஸ்.எஸ்.எல். சி., பிளஸ்-2 பொதுத்தேர்வுகளுக்கான அட்டவணை கல்வியாண்டின் இடையில் வெளியிடப்பட்டு வருகிறது.

அதாவது பெரும்பாலும் அக்டோபர் மாதத்தில் வெளியிடப்படுகிறது. ஆனால் கடந்த ஆண்டில் (2025) தாமதமாக நவம்பர் மாதம் 4-ந்தேதி வெளியானது. அதற்கு முந்தைய ஆண்டில் (2024) அக்டோபர் 14-ந்தேதி வெளியிடப்பட்டு இருந்தது.

கடந்த கல்வியாண்டுக்கான தேர்வுகள் சட்டசபை பொதுத் தேர்தலை கருத்தில் கொண்டு தேர்வு முன்கூட்டியே அட்டவணை வெளியிட்டு, நடத்தியும் முடிக்கப்பட்டது.

நடப்பு கல்வியாண்டில் சுமார் 15 லட்சத்துக்கும் மேற்பட்டோர் எழுத இருக்கும் எஸ். எஸ்.எல்.சி., பிளஸ்-2 பொதுத்தேர்வுகளுக்கான அட்டவணை எப்போது வெளியாகும்? என்ற எதிர்பார்ப்பில் மாணவமாணவிகளும், ஆசிரியர்களும் ஆவலோடு காத்திருந்தார்கள்.

இந்நிலையில் சென்னையில் இன்று அமைச்சர் ராஜ்மோகன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது பொதுத்தேர்வு கால அட்டவணையை வெளியிட்டு பேசினார். அமைச்சர் நிருபர்களிடம் கூறியதாவது:

12ம் வகுப்புக்கான அட்டவணை

12ம் வகுப்பு மாணவர்களுக்கான பொதுத் தேர்வு தமிழ் மற்றும் மொழிப்பாடத் தேர்வுடன் மார்ச் 3-ந்தேதி தொடங்கி மார்ச் 29-ந்தேதி வரை நடைபெறுகின்றன. செய்முறைத் தேர்வுகள் பிப்ரவரி 8 முதல் பிப்ரவரி 18 வரை நடைபெறுகின்றன.

மார்ச் 3 தொடக்கம்

தமிழ் - 03.03.2027. ஆங்கிலம் - 09.03.2027 வேதியியல் - 12.03.2027 உயிரியல் - 19.03.2027 இயற்பியல் - 23.03.2027 கணிதம் - 29.03.2027 கணக்குப் பதிவியல் - 12.03.2027 கணினி அறிவியல் - 15.03.2027 வரலாறு - 19.03.2027 பொருளியல் - 23.03.2027 விலங்கியல் - 29.03.2027 புவியியல் - 12.03.2027 கணினி பயன்பாடு - 15.03.2027 உயிர் வேதியியல் - 15.03.2027 அரசியல் அறிவியல் - 15.03.2027



புள்ளியியல் - 15.03.2027 வணிக கணிதம் - 19.03.2027 வணிகவியல் - 29.03.2027 நுண்ணுயிரியல் - 29.03.2027 ஊட்டச்சத்து, உணவுமுறை - 29.03.2027 வேளாண் அறிவியல் - 29.03.2027 நர்சிங் (பொது) - 29.03.2027 உணவு சேவை மேலாண்மை - 29.03.2027

11ம் வகுப்பு அட்டவணை

11ம் வகுப்பு (அரியர்) மாணவர்களுக்கான பொதுத்தேர்வுகள் மார்ச் 5-ந்தேதி தொடங்கி ஏப்ரல் 1-ந்தேதி வரை நடைபெறுகின்றன. 11 மற்றும் 12ம் வகுப்பு தேர்வுகளுக்கான முடிவுகள் மே 7-ல் வெளியாக வாய்ப்புள்ளது.

10ம் வகுப்பு அட்டவணை

10ம் வகுப்பு மாணவர்களுக்கான பொதுத் தேர்வுகள் மார்ச் 17 முதல் ஏப்ரல் 12-ம் தேதி வரை நடைபெறுகின்றன. பிப்ரவரி 19 முதல் பிப்ரவரி 26 வரை செய்முறைத் தேர்வுகள் நடைபெறுகின்றன. 10ம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவு மே 20- ல் வெளியாக வாய்ப்புள்ளது. யூமிழ் பாடம் - 17. 03.2027 ஆங்கில பாடம் - 25.03.2027 கணிதம் - 31.03.2027 அறிவியல் - 05.04.2027 சமூக அறிவியல் - 09.04.2027 விருப்ப மொழி - 12.04.2027

நடப்பு கல்வியாண்டில் சுமார் 15 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் எஸ்.எஸ்.எல். சி., பிளஸ்-2 பொதுத்தேர்வுகளை எழுத இருக்கின்றனர். பொதுத் தேர்வெழுதும் மாணவ, மாணவிகளுக்கு வாழ்த்துகள்.

தனியார் பள்ளிகளுக்கு எச்சரிக்கை

தனியார் பள்ளிகளில் 10 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை வகுப்பு நடத்தினால் கட்டாயமாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் ராஜ் மோகன் தெரிவித்தார்.

## உலக சந்தையை நிலைப்படுத்தவே ரஷ்யாவிடம் டீசல் வாங்குகிறோம் - டிரம்ப் சமாளிப்பு

சென்னை 15, அக்டோபர் 2026: அதிக விலையால் பாதிக்கப்பட்டுள்ள உலக சந்தையை நிலைப்படுத்துவதற்காக ரஷ்யாவிடம் டீசல் வாங்குகிறோம் என அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

நிருபர்களிடம் அதிபர் டிரம்ப் கூறியதாவது: நாங்கள் உக்ரைனுக்கு உதவினோம். ஒரு இறுதித் தீர்வை எட்டுவதற்கு நாங்கள் அவர்களுக்கு உண்மையாகவே உதவுகிறோம்; நாங்கள் உளவுத் தகவல்களைப் பகிர்ந்து வருகிறோம். இந்தப் போர் முடிவுக்கு வர வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக நாங்கள் உக்ரைன், ரஷ்யா உடன் இணைந்து செயல்பட்டு வருகிறோம். அவர்கள் இருவருமே போர் முடிவுக்கு வருவதைத்தான் விரும்புகிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

போர் நிறுத்தத்தை மேற்கொள்வது எப்படி என்று அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்களுக்கு இடையே மிகுந்த பகைமை நிலவுகிறது. அவர்கள் இருவரும் சற்று விசித்திரமானவர்கள் தான், ஆனால் அனைத்தும் சரியாகிவிடும்.



ரஷ்ய சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து டீசல் வாங்குவது, அதிக விலையால் பாதிக்கப்பட்டுள்ள உலக சந்தையை நிலைப்படுத்துவதற்காக தான். ரஷ்ய டீசல் வாங்கும் முடிவு எங்கள் நலனுக்காக எடுக்கப்படவில்லை.

இவ்வாறு அதிபர் டிரம்ப் கூறினார்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
வியாழன்,
அக்டோபர் 15, 2026

## லிங்க்ட்இன்னின் 2026 ஆம் ஆண்டுக்கான சென்னையின் சிறந்த ஸ்டார்ட்அப்கள் பட்டியலில் ஜெப்டோ முதலிடம் வகிக்கிறது

சென்னை 15, அக்டோபர் 2026: உலகின் மிகப்பெரிய தொழில்முறை வலைப்பின்னல் தளமான ‘லிங்க்ட்இன்’ தொழில் வாழ்க்கையைச் சிறப்பாக முன்னெடுத்துச் செல்லக் கூடிய வளர்ந்து வரும் நிறுவனங்களின் வருடாந்திரப் பட்டியலான ‘2026-ஆம் ஆண்டின் சென்னையின் சிறந்த ஸ்டார்ட்அப் நிறுவனங்கள்’ பட்டியலை இன்று வெளியிட்டது. வேலை வாய்ப்பு வளர்ச்சி, பயனர் ஈடுபாடு, வேலைக்கான ஆர்வம் மற்றும் சிறந்த திறமையாளர்களை ஈர்த்தல் ஆகிய அம்சங்கள் குறித்த லிங்க்ட்இன்-இன் பிரத்யேகத் தரவுகளின் அடிப்படையில் இந்தப் பட்டியல் உருவாக்கப்பட்டுள்ளது. பல்வேறு துறைகளில் வேகமாக வளர்ந்து வரும் நிறுவனங்கள் மற்றும் சென்னையில் தொழில் வல்லுநர்கள் ஆராயக்கூடிய வாய்ப்புகள் குறித்த கண்ணோட்டத்தை இந்தப் பட்டியல் வழங்குகிறது.

லிங்க்ட்இன்னின் 2026 இந்திய சிறந்த ஸ்டார்ட்அப்ஸ் பட்டியலைப் போலவே, சென்னைக்கான பட்டியலில் விரைவு வர்த்தக நிறுவனமான ஜெப்டோ (#1) முதலிடம் வகிக்கிறது. அதனைத் தொடர்ந்து, வணிகங்களுக்கு டிஜிட்டல் விளம்பரங்களை நெறிப்படுத்த உதவும் Zocket *(#2)* மற்றும் மின்சார மோட்டார் சைக்கிள் தயாரிப்பாளரான Raptee.HV *(#3)* ஆகியவை இடம் பெற்றுள்ளன. இந்த முதல் 10 இடங்கள் கொண்ட பட்டியல், மின்சார வாகனப் போக்குவரத்து, நிறுவனத் தொழில்நுட்பம், விண்வெளி மற்றும் வேளாண் தொழில் நுட்பம் ஆகிய துறைகளைச் சேர்ந்த நிறுவனங்களை ஒன்றிணைத்து, வணிகங்கள் மற்றும் நுகர்வோர் இருவருக்கும் தொழில்நுட்பம் சார்ந்த தீர்வுகளை உருவாக்குவதில் சென்னையின் வளர்ந்து வரும் வலிமையைப் பிரதிபலிக்கிறது.

சென்னையின் ஆழமான-தொழில்நுட்ப பலம் இயக்கம் மற்றும் விண்வெளி தீர்வுகள் முழுவதும் புதுமைகளை உந்துகிறது

சென்னையின் பொறியியல் மற்றும் உற்பத்தித் துறை சார்ந்த வலிமைகள், வளர்ந்து வரும் துறைகளில் புதிய கண்டுபிடிப்புகளைத் தொடர்ந்து ஊக்குவித்து வருகின்றன. Raptee. HV *(#3)* மற்றும் The ePlane Company *(#6)* ஆகியவை முறையே மின்சார வாகனப் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்துத் துறைகளில் புதிய எல்லைகளைத் தொட்டு வருகின்றன; அதேவேளையில், Farm wiseAI *(#9)* விவசாயத் துறைக்குத் தொழில்நுட்பம் சார்ந்த தீர்வுகளை வழங்குகிறது. பெரு நிறுவனங்களுக்கான தொழில்நுட்பத் துறையிலும் இந்நகரம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டி வருகிறது; Spend flo *(#4)*, Everstage *(#5)* மற்றும் Growfin *(#7)* ஆகிய நிறுவனங்கள் வணிகச் செலவுகள், விற்பனைச் செயல்பாடு மற்றும் நிதிச் செயல்பாடுகள் சார்ந்த தீர்வுகளை உருவாக்கி வருகின்றன.

Kynhood *(#8)* மற்றும் Stockarea *(#10)* ஆகியவற்றுடன் இணைந்து, இந்தப் பட்டியல் சென்னையில் வளர்ந்து வரும் ‘டீப்-டெக்’ மற்றும் பெரு நிறுவனங்களை மையமாகக் கொண்ட ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் பன்முகத்தன்மையை வெளிப்படுத்துகிறது.

## பாதுகாப்புத் துறை செயற்கை நுண்ணறிவு: ஐஐடி மெட்ராஸ் – மெதாஸ்த்ரா ஒப்பந்தம்



சென்னை 15, அக்டோபர் 2026: இந்தியத் தொழில்நுட்பக் கழகம் மெட்ராஸின் தொழில்நுட்பப் புத்தாக்க மையமான ஐஐடிஎம் பிரவர்த்தக் டெக்னாலஜீஸ் அறக்கட்டளை, பாதுகாப்புத் துறையில் உள்நாட்டிலேயே செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பங்களை உருவாக்குவதை ஊக்குவிக்கும் நோக்கில், மெதாஸ்த்ரா டெக்சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. ஐஐடி மெட்ராஸ் வளாகத்தில் நடைபெற்ற இந்த ஒப்பந்த நிகழ்வில், ஐஐடி மெட்ராஸ் இயக்குநர் பேராசிரியர் வி. காமகோடி, ஐஐடிஎம் பிரவர்த்தக் நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் டாக்டர் எம். ஜே. சங்கர் ராமன் ஆகியோர் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது. மெதாஸ்த்ரா நிறுவனத்தின் பாதுகாப்புத் துறை முதன்மை ஆலோசகரான ஓய்வுபெற்ற வான்படைத் துணைத் தளபதி ஆர். குருஆரியும் இந்நிகழ்வில் பங்கேற்றார்.

கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறைகளில் உருவாகும் நவீனத் தொழில்நுட்பங்களை நடைமுறைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வரும் திறன்கொண்ட ஆழ்நிலைத் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதன் மூலம், இந்தியாவின் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் பாதுகாப்புத் தொழில்நுட்பத் திறன்களை வலுப்படுத்தும் விரிவான முயற்சியின் ஒரு பகுதியாக இந்த ஒப்பந்தம் அமைந்துள்ளது. இதன்படி, இந்திய ஆயுதப் படைகளின் தேவைகளுக்குப் பயன்படக்கூடிய, உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்டு நேரடிப் பயன்பாட்டுக்குத் தயாராக இருக்கும் செயற்கை நுண்ணறிவுத் தீர்வுகளை உருவாக்கும் நோக்கில், ஐஐடிஎம் பிரவர்த்தக் மற்றும் மெதாஸ்த்ரா நிறுவனங்கள் பல்வேறு செயற்கை நுண்ணறிவுத் திட்டங்களில் இணைந்து செயல்பட உள்ளன.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம், இந்தியாவின் முன்னணி ஆராய்ச்சி நிறுவனங்கள், ஆழ்நிலைத் தொழில்நுட்பப் புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை நடைமுறைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவரும் முயற்சிகள் ஒருங்கிணைந்துள்ள ஐஐடி மெட்ராஸ் புத்தாக்கச் சூழலமைப்பில் மெதாஸ்த்ரா நிறுவனமும் இணைகிறது. இதன் மூலம், ஐஐடி மெட்ராஸின் ஆராய்ச்சி நிபுணத்துவம் மற்றும் புத்தாக்க வலையமைப்பை நெருக்கமாகப் பயன்படுத்தும் வாய்ப்பு மெதாஸ்த்ரா நிறுவனத்துக்குக் கிடைக்கும். கூட்டு ஆராய்ச்சி, பேராசிரியர்களுடனான ஒத்துழைப்பு, ஆய்வக வசதிகளைப் பயன்படுத்துதல் மற்றும் மாணவர்களின் பங்கேற்பு உள்ளிட்ட வாய்ப்புகள் மூலம், இந்தியாவின் இறையாண்மையைப் பாதுகாக்கும் உள்நாட்டுப் பாதுகாப்புச் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பங்களை உருவாக்கும் பணிகள் மேலும் வலுப்பெறும்.

## பிரதமர் அக்டோபர் 15ல் லடாக்கில் ரூ.3,350 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைக்கிறார்

சென்னை 15, அக்டோபர் 2026: பிரதமர் திரு நரேந்திர மோடி, 2026 அக்டோபர் 15 அன்று லடாக்கில் நண்பகல் மணி 12.30 அளவில் ரூ.3,350 கோடி மதிப்பிலான திட்டங்களைக் காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கி வைத்து ஐந்து வளர்ச்சித் திட்டங்களை நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார். பின்னர், அங்கு கூடியிருப்பவர்களிடையே உரையாற்றுகிறார். இந்த ஐந்து திட்டங்கள் அப்பிராந்தியத்தில் போக்குவரத்தை வலுப்படுத்தி எரிசக்தி உள்கட்டமைப்பை மேம்படுத்தி கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாத்து நீர் பாதுகாப்பை மேம்படுத்தும்.

லேயி-ல் உள்ள குஷோக் பகுலா ரிம்போச்சி விமான நிலையத்தில் ரூ.640 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய பயணியர் முனைய கட்டிடத்தைப் பிரதமர் திறந்து வைக்கிறார். 23,800 சதுர மீட்டருக்கும் மேலான பரப்பளவில் அமைந்துள்ள இந்த நவீன முனையம் ஆண்டுக்கு 35 லட்சம் பயணிகளைக் கையாளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. எரிசக்தி திறனை அதிகரிக்கவும், கார்பன் வெளியேற்றத்தைக் குறைக்கவும், புவி வெப்ப ஆற்றலை பயன்படுத்தும் இந்த முனையம் லடாக்கின் நீடித்த உள்கட்டமைப்பின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது. பயணிகளுக்கான நவீன வசதிகளையும், லடாக்கின் செழுமையான கலாச்சார பாரம்பரியத்தின் அம்சங்களையும் இணைக்கும் வகையில் அமைந்துள்ள இம்முனையம் பயணிகளின் வசதிகளை மேம்படுத்துவதோடு நாட்டின் இதர பகுதிகளுடன் விமானப் போக்குவரத்து இணைப்பையும் வலுப்பெற செய்யும்.



எல்லைச் சாலைகள் அமைப்பால் அமைக்கப்பட்டுள்ள 298 கிலோ மீட்டர் நீளமுடைய நிம்மு - பதும் - தார்சா சாலையைப் பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணிக்க உள்ளார். தொலைதூரப் பகுதியில் உள்ள ஜன்ஸ்கார் பள்ளத்தாக்கு வழியாக லேல்-ல் உள்ள நிம்முவையும், இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள தார்சாவையும் இணைக்கும் இந்த சாலை ஸ்ரீநகர் - லே மற்றும் மணாலி - லே நெடுஞ்சாலைகளுக்கு மாற்றாக லடாக்கிற்கு மற்றொரு இணைப்புப் பாதையை ஏற்படுத்துகிறது. அதிக உயரத்தில் அமைந்துள்ள ஷின்குன் லா கணவாய் உள்ளிட்ட சவால்மிக்க இமய மலைப் பகுதிகள் வழியாகச் செல்லக்கூடிய இந்தச் சாலை பொறியியல் திறனுக்கு எடுத்துக் காட்டாகும். இது சுகாதாரம், கல்வி, சந்தைகள், அத்தியாவசிய சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துவதன் மூலம் ஜன்ஸ்கார் பகுதி மக்களுக்கும் பயன்தரும்.

அமிர்த நீர்நிலைகள் நோக்கங்களுக்கு ஏற்ப, நீர் சேமிப்பின் லடாக்கின் தனித்துவமிக்க புவியியல், பருவநிலை சவால்களை எதிர்கொள்ளும் நோக்கில் தொடங்கப்பட்ட ஹிம் நீர் நிலைத் திட்டத்தின் கீழ், 40 கிராமங்களில் உருவாக்கப்பட்ட 40 நீர் நிலைகளைப் பிரதமர் திறந்து வைக்கிறார். இதனால், நீர்பாசனத்திற்கு உதவியாக இருந்தும், வேளாண் வாழ்வாதாரங்களைத் தக்க வைத்து அப்பகுதியில் நீடித்த நீர்பாதுகாப்பை வலுப்படுத்துகிறது.

## ஆசிய விளையாட்டுகளில் 2026-ல் பங்கேற்ற இந்திய குழுவினருடன் பிரதமர் அக்டோபர் 15 அன்று உரையாடுகிறார்

சென்னை 15, அக்டோபர் 2026: பிரதமர் திரு நரேந்திர மோடி, ஆசிய விளையாட்டுகள் 2026-ல் பங்கேற்ற இந்திய குழுவினருடன் புதுதில்லி மேஜர் தயான் சந்த் தேசிய மைதானத்தில் 2026 அக்டோபர் 15 அன்று மாலை மணி 4.30 அளவில் உரையாட உள்ளார். அத்துடன், இந்நிகழ்ச்சியில் கூடியிருப்பவர்களிடையேயும் அவர் உரையாற்ற உள்ளார். ஜப்பானின் அய்ச்சி-நகோயாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா 21 தங்கம், 27 வெள்ளி, 37 வெண்கலம் உட்பட 85 பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் நான்காம் இடத்தைப் பிடித்தது. இதன் மூலம் ஆசிய விளையாட்டுப் போட்டியின் பதக்கப்பட்டியலில் இந்தியா தொடர்ந்து இரண்டாவது முறையாக முதன்மையான ஐந்து நாடுகள் என்ற வரிசையில் இடம் பெற்றது. இது விளையாட்டுகளின் பல்வேறு பிரிவுகளில் நாட்டின் வளர்ந்து வரும் போட்டித்தன்மையைப் பிரதிபலிக்கிறது.

இப்போட்டிகளில் வில்வித்தையில் வரலாற்று சிறப்புமிக்க செயல்பாடு, ஹாக்கிப் போட்டியில் ஆடவர், மகளிர் பிரிவினர் தங்கப் பதக்கம் வென்றது, சாஃப்ட் டென்னிஸ், தற்காப்புக் கலை பிரிவில் முதன் முறையாக பதக்கம் வென்றது உட்பட இந்தியா பல்வேறு சாதனைகளைப் பதிவு செய்தது.

இந்நிகழ்ச்சியில் இந்திய விளையாட்டுக் குழுவினர், அவர்களுடைய பயிற்சியாளர்கள், உதவிப் பணியாளர்கள், இந்திய ஒலிம்பிக் சங்க அதிகாரிகள், தேசிய விளையாட்டு கூட்டமைப்பு பிரதிநிதிகள், மத்திய இளையோர் நலன், விளையாட்டு அமைச்சக அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்க உள்ளனர்.

## தென்னக இந்தியப் பெருங்கடல் மீன்வள ஒப்பந்தத்தில் இந்தியா இணைவதற்கு மத்திய அரசு ஒப்புதல்

சென்னை 15, அக்டோபர் 2026: உலக அளவில், மீன்வள நிர்வாகத்தில் இந்தியாவின் நிலையை வலுப்படுத்தும் ஒரு முக்கிய நடவடிக்கையாக, தென்னக இந்தியப் பெருங்கடல் மீன்வள ஒப்பந்தத்தில் இந்தியா இணைவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய அரசால் டிசம்பர் 2025-ல் வெளியிடப்பட்ட ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகளுக்கான வழிகாட்டுதல் நெறி முறைகளைத் தொடர்ந்து, இந்த நடவடிக்கை, இந்தியாவின் மீன்பிடி தொகுதியை சர்வதேச கடற்பகுதிகளுக்கு விரிவுபடுத்துவதற்கான ஒரு பிராந்திய கட்டமைப்பை வழங்கும்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், இந்தியாவின் ஊத்தி சார் நலன்களைப் பாதுகாக்கவும், பொருளாதார வாய்ப்புகளை விரிவுபடுத்தவும், அதிக மதிப்புமிக்க கடல் வளங்களை நிலையான முறையில் பயன்படுத்துவதற்கான சட்டப்பூர்வ உரிமைகளை நிலை நாட்டவும் இந்தியா வுக்கு வாய்ப்பு ஏற்படும். மேலும், இது ஆழ் கடல் பகுதிகளில், இந்தியாவின் அங்கீகரிக்கப் பட்ட செயல்பாடுகளை உறுதிப்படுத்துவதுடன், நாட்டின் பொருளாதாரம், அறிவியல், உத்திசார் முன்னுரிமைகளுக்கு ஏற்ப இந்தியாவின் கடல்சார் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துகிறது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## இந்த பண்டிகை காலத்தில், ஆம்பியர் 'பாரதத்தின் ஸ்மார்ட் ரைடு' திட்டத்தை சென்னைக்குக் கொண்டு வருகிறது, புதிய அனுபவ மையத்துடன் தனது சில்லறை விற்பனை இருப்பை விரிவுபடுத்துகிறது

சென்னை 15, அக்டோபர் 2026: நவராத்திரி மற்றும் ஆயுத பூஜை அடங்கிய பண்டிகை காலம் தொடங்குவதையொட்டி, ஆம்பியர் தனது 'பாரதத்தின் ஸ்மார்ட் ரைடு' திட்டத்தை சென்னை நுகர்வோருக்குக் கொண்டுவருகிறது. இதற்காக, ஆம்பியர் நெக்ஸஸ் இஎக்ஸ்+ மற்றும் இன்டெல்லிபேக் உடனான மேக்னஸ் ஜிமேக்ஸ் ஆகியவற்றை அறிமுகப்படுத்துவதோடு, கொன்னூர் ஹைரோட்டில் புதிய அனுபவ மையமான ஜெயின் இவி வேர்ல்டையும் திறக்கிறது. பண்டிகை காலம் என்பது சுற்றுப்புறங்கள், சந்தைகள் மற்றும் சமூகங்கள் முழுவதும் மக்களின் நடமாட்டத்தை அதிகரிப்பதால், ஆம்பியரின் வளர்ந்து வரும் மின்சார ஸ்கூட்டர் தொகுப்பு, நடைமுறைப் பயன்பாடு, தொழில்நுட்பம் மற்றும் எளிதில் அணுகக்கூடிய தன்மை ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் தயாரிப்புகளுடன், அன்றாட பயணத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.



இந்தத் தொகுப்பின் மையமாக, புதிய 5 கேடபிள்யு மோட்டாரால் இயக்கப்படும் ஆம்பியர் நெக்ஸஸ் இஎக்ஸ்+ உள்ளது. இது சவாலான நிலப்பரப்புகளில் அதன் செயல்திறனை நிரூபிக்கும் பல தேசிய மற்றும் சர்வதேச சாதனைகளைப் படைத்துள்ளது. மேக்னஸ் ஜிமேக்ஸ் அன்றாடப் பயன்பாடு, இணைக்கப்பட்ட தொழில்நுட்பம் மற்றும் மலிவு விலை ஆகியவற்றை ஒன்றிணைக்கிறது, அதே நேரத்தில் மேக்னஸ் நியோ, பயன்பாட்டுக்கு ஏற்ற வடிவமைப்பு மற்றும் சென்னையில் வசதியான ஓட்டுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆம்பியர் ரியோவைப், மாணவர்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் உள்ளிட்ட இளம் ஓட்டுநர்களுக்கான தயாரிப்பு வரிசையை மேலும் விரிவுபடுத்துகிறது. நெக்ஸஸ் இஎக்ஸ்+ மற்றும் மேக்னஸ் ஜிமேக்ஸ் வேரியண்ட்கள், NxG.io மூலம் இயக்கப்படும் இன்டெல்லிபேக்குடன் வருகின்றன. இது ஆம்பியர் கனெக்ட் செயலி வழியாக க்ரூஸ் கண்ட்ரோல், ஹில் ஹோல்ட் அசிஸ்ட், ஃபைண்ட் மை ஸ்கூட்டர் மற்றும் டர்ன்-பை-டர்ன் நேவிகேஷன் உள்ளிட்ட 30-க்கும் மேற்பட்ட அறிவார்ந்த அம்சங்களை வழங்குகிறது. இந்த தயாரிப்பு வரிசையானது, அடுத்த தலைமுறை எல்எஃப்பி பேட்டரி தொழில்நுட்பம் மற்றும் ஐந்து ஆண்டுகள்/75,000 கி.மீ. வரையிலான நிலையான பேட்டரி உத்தரவாதத்துடன் வருகிறது. இது வாடிக்கையாளர்களுக்கு அன்றாட மின்சார வாகனப் பயன்பாட்டில் அதிக நம்பிக்கையை அளிக்கிறது.

இந்த புதிய அனுபவ மையத்தின் திறப்பு விழா, முக்கிய சந்தைகளில் ஆம்பியரின் சில்லறை மற்றும் சேவை இருப்பை விரிவுபடுத்துவதற்கும், தயாரிப்புகள் மற்றும் உரிமையாளர் ஆதரவை வாடிக்கையாளர்களுக்கு நெருக்கமாகக் கொண்டு வருவதற்கும் கிரீவ்ஸ் எலக்ட்ரிக் மொபிலிட்டி மேற்கொள்ளும் தொடர்ச்சியான முயற்சியின் ஒரு பகுதியாகும். சென்னையில் உள்ள இந்த சமீபத்திய மையம், உள்ளூர் வாடிக்கையாளர் ஈடுபாட்டை ஆழப்படுத்துவதற்கும், மின்சார வாகனப் பயன்பாட்டிற்கான அணுகலை மேம்படுத்துவதற்கும் மற்றொரு படியைக் குறிக்கிறது.

## குமரன் நகர் பகுதியில் மளிகை கடையில் சில்லறை கேட்டு, தர மறுத்ததால், கண்ணாடி பொருட்களை உடைத்து, தகராறு செய்து, தாக்கிய 2 நபர்கள் கைது

சென்னை 15, அக்டோபர் 2026: சென்னை, மேற்கு மாம்பலம், மேற்கு கவரை தெருவில் வசித்து வரும் ரவி, வ/45, த/பெ.ரத்தினவேல் என்பவர் அவரது வீட்டிற்கு அருகே மேற்கு மாம்பலம் சாலையில் மளிகை கடை வைத்து நடத்தி வருவதாகவும், நேற்று (13.10.2026) இரவு, ரவியின் மகன் நித்திஷ் குமார் என்பவர் கடையில் வியாபாரம் செய்து கொண்டிருந்த போது, அங்கு வந்த அதே பகுதியைச் சேர்ந்த விக்னேஷ் என்பவர் பணம் ரூ.500/- கொடுத்து சில்லறை கேட்டபோது, நித்திஷ் குமார் சில்லறை இல்லை என்று கூறியதாகவும், அப்போது விக்னேஷ் தகாத வார்த்தைகள் பேசி, கடையில் இருந்த கண்ணாடி பொருட்களை உடைத்து, தகராறு செய்துவிட்டு, தடுக்க வந்த நித்திஷ்குமாரை கையால் தாக்கிவிட்டு சென்றதாகவும், இது குறித்து தகவலறிந்த ரவி உடனே கடைக்கு வந்த போது, விக்னேஷ் மற்றும் அவரது நண்பர் கார்த்திக் ஆகியோர் மீண்டும் ரவியிடம் வீண் வாக்குவாதம் செய்து, கையாலும், உடைந்த கண்ணாடி துண்டுகளாலும் ரவியை தாக்கி, கொலை மிரட்டல் விடுத்து, இருவரும் தப்பிச் சென்றதாகவும், மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட இருவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு ரவி என்பவர் ஆர்-6 குமரன் நகர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். ஆர்-6 குமரன் நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட மேற்கு மாம்பலத்தைச் சேர்ந்த எதிரிகள் 1. விக்னேஷ், வ/28 மற்றும் 2. கார்த்திக், வ/29 ஆகிய 2 நபர்களை நேற்று (14.10.2026) கைது செய்தனர். விசாரணையில் எதிரி விக்னேஷ் என்பவர் மெக்கானிக்காகவும், எதிரி கார்த்திக் ஆட்டோ ஓட்டி வருவதும் தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட உள்ளனர்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

## உலக பாதுகாப்பு அமைப்பு (டபிள்யுஎஸ்ஓ) இந்தியா சார்பில் மும்பையில் 7-வது வருடாந்திர தொழில் முறை மேம்பாட்டு கருத்தரங்கம் மற்றும் 5-வது ஓஹெச்எஸ்இ சுற்றுச்சூழல் விருதுகள் 2026!

மும்பை 15, அக்டோபர் 2026: வேர்ல்ட் சேஃப்டி ஆர்கனைசேஷன் (டபிள்யுஎஸ்ஓ)-இன் இந்திய தேசிய அலுவலகம், மகாராஷ்டிர மாநிலம் மும்பையில் உள்ள 'தி லலித்' ஹோட்டலில், அக்டோபர் 13, 2026 அன்று தனது 7-வது வருடாந்திர தொழில்முறை மேம்பாட்டு கருத்தரங்கையும் (பிடிஎஸ்), அதனுடன் இணைந்து 5-வது டபிள்யுஎஸ்ஓ இந்தியா தொழில்சார் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் (ளிபிஷிணி) விருதுகள் 2026 வழங்கும் விழாவும் வெற்றிகரமாக நடைப்பெற்றது.

இந்நிகழ்வில் தொழில்சார் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் நடைமுறைகளில் சிறந்து விளங்கியதற்காக 197 நிறுவனங்கள் மற்றும் வல்லுநர்கள் அங்கீகரிக்கப்பட்ட நிலையில், 23 மாநிலங்களைச் சேர்ந்த 400-க்கும் மேற்பட்ட வல்லுநர்கள் பங்கேற்றனர்.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றுகூடல் நிகழ்வில் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நிபுணர்கள், தொழில் துறைத் தலைவர்கள், பாதுகாப்பு நடைமுறை வல்லுநர்கள், சுற்றுச்சூழல் நிபுணர்கள் மற்றும் பிற முக்கியப் பங்குதாரரர்கள் எனப் பல்வேறு துறைகள் மற்றும் தொழில்களைச் சேர்ந்த, இந்தியாவின் 23 மாநிலங்களைச் சார்ந்த 400-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகளை ஒன்றிணைத்தது. தொழில்சார் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த புதிய சவால்கள், இத்துறையின் சிறந்த நடைமுறைகள், அத்துடன் பாதுகாப்பான, ஆரோக்கியமான மற்றும் நிலையான பணிச்சூழலை உருவாக்குவதற்கான வளர்ந்து வரும் அணுகுமுறைகள் குறித்த விவாதங்களுடன், யொழில்முறை மேம்பாடு, அறிவுப் பரிமாற்றம் மற்றும் கூட்டுச் செயல்பாட்டிற்கான ஒரு உயர்மட்டக் களத்தை இந்த வருடாந்திரக் கருத்தரங்கு வழங்கியது.



ஓஹெச்எஸ்இ சிறப்பிற்காக 197 வெற்றியாளர்கள் அங்கீகரிக்கப்பட்டனர். தொழில்சார் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் மேன்மை ஆகியவற்றில் மிகச்சிறந்த அர்ப்பணிப்பை வெளிப்படுத்திய நிறுவனங்களையும் நிபுணர்களையும் கௌரவித்த 5வது டபிள்யுஎஸ்ஓ இந்தியா ஓஹெச்எஸ்இ விருதுகள் 2026, இந்த நிகழ்வின் ஒரு முக்கிய சிறப்பம்சமாக அமைந்தது.

இவ்விருதுகளுக்கு 396 பரிந்துரைகள் பெறப்பட்டு, விழாவின் போது மொத்தம் 197 வெற்றியாளர்கள் அங்கீகரிக்கப்பட்டனர். அளவிடக்கூடிய ஓஹெச்எஸ்இ (தொழில்சார் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல்) செயல்பாடு, தொடர்ச்சியான மேம்பாடு மற்றும் வலுவான பணியிடப் பாதுகாப்பு கலாச்சாரங்களை உருவாக்குதல் ஆகியவற்றின் மீது இந்தியா முழுவதும் உள்ள நிறுவனங்கள் அதிகரித்து வரும் முக்கியத்துவத்தையே இந்த அமோகமான வரவேற்பு பிரதிபலித்தது.

197 வெற்றியாளர்களை அங்கீகரித்தது 2026-ஆம் ஆண்டின் விருதுகளின் முக்கிய சாதனைகளில் ஒன்றாக அமைந்தது; அத்துடன் பாதுகாப்பான, ஆரோக்கியமான மற்றும் சுற்றுச்சூழலுக்குப் பொறுப்பான பணிச்சூழல்களை உருவாக்குவதில் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் தொழில்முறை நிபுணர்களைக் கொண்டாடுவதன் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தையும் இது முன்னிலைப்படுத்தியது.

விருது பெற்றவர்களைப் பொறுத்தவரை, இந்த அங்கீகாரம் ஒரு சாதனையாக அமைந்தது மட்டுமல்லாமல், தங்கள் நிறுவனங்கள் மற்றும் தொழில்துறைகளுக்குள் பாதுகாப்பு கலாச்சாரத்தை வலுப்படுத்த அவர்கள் மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான முயற்சிகளுக்கான ஒரு உறுதிப்படுத்தலாகவும் அமைந்தது.

ஓஹெச்எஸ்இ (தொழில்சார் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல்) துறையில் அர்த்தமுள்ள முன்னேற்றத்தை அடைய கூட்டு நடவடிக்கை, தொழில்முறை ஒத்துழைப்பு மற்றும் தொடர்ச்சியான மேம்பாட்டிற்கான அர்ப்பணிப்பு ஆகியவை அவசியம் என்பதை இந்நிகழ்வு வலியுறுத்தியது. இந்தியா மற்றும் பிற பகுதிகளைச் சேர்ந்த நிபுணர்கள் மற்றும் அமைப்புகளை ஒன்றிணைப்பதன் மூலம், வலுவான ஓஹெச்எஸ்இ விளைவுகளுக்குப் பங்களிக்கக்கூடிய அறிவு, அனுபவங்கள் மற்றும் கருத்துகளைப் பரிமாறிக்கொள்வதற்கான ஒரு முக்கிய தளத்தை இக்கருத்தரங்கு உருவாக்கியது.

## கூட்டுப் பணிப்படை 154-ன் தலைமைப் பொறுப்பை இந்தியக் கடற்படைநிறைவு செய்கிறது

சென்னை 15, அக்டோபர் 2026: பஹ்ரைனின் மனாமாவில் 2026 அக்டோபர் 14 அன்று ரூடைபெறும் விழாவில், கூட்டுப் பணிப்படை 154-ன் தலைமைப் பொறுப்பை இந்தியக் கடற்படை ஒப்படைக்க உள்ளது. இந்தியக் கடற்படை, கூட்டு கடல்சார் படைகளின் ஒரு படைப்பிரிவின் தலைமைப் பொறுப்பை நிறைவு செய்யும் வகையில் இந்த விழா நடைபெறுகிறது. கூட்டுப் பணிப் படை 154 என்பது பிரத்யேக பன்னாட்டு கடல்சார் பயிற்சிப் பணிப்படையாகும். 47 நாடுகளைக் கொண்ட இந்த படைப் பிரிவின் அமைப்பிற்குள் ஒருங்கிணைந்த செயல்பாட்டுத் திறன், தயார் நிலையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட தொழில் முறைப் பயிற்சி, திறன் மேம்பாட்டை இது எளிதாக்குகிறது. 2022-ல், இந்த கூட்டுப் பணிப்படைப் பிரிவில் இந்தியா இணைந்தது.



2023-ல் முழு உறுப்பினராக இருந்தது. 2026 பிப்ரவரி 11 அன்று கூட்டுப் பணிப்படை 154-ன் தலைமைப் பொறுப்பை இந்தியக் கடற்படை ஏற்றுக் கொண்டது. இந்தியக் கடற்படையின் தலைமையிலான இக்காலகட்டத்தில், இந்தப் படைப்பிரிவின் கடல்சார் மேம்பாட்டுப் பயிற்சியின் கீழ் கூட்டுப் பணிப்படை பிரிவு 154-ன் தொடர்ச் பன்னாட்டுப் பயிற்சித் திட்டங்களை மேற்கொண்டது. இக்கால கட்டத்தில், 20 பணியாளர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி கள், ஆபரேஷன் காம்பஸ் ரோஸ் 26-1, ஆபரேஷன் சதர்ன் ரெடினஸ் 26-2, கடல் கொள்ளை, ஆயுத மேந்திய கொள்ளை தொடர்பான துறைசார் நிபுணர் பரிமாற்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

## துபாயில் வெளியிடப்பட்ட 'தி ரீல் ஃபைல்ஸ்' சீசன் 4-ன் அதிகாரப்பூர்வ டிரெய்லர் மற்றும் இயக்குநர் ஜெனோபர் பாத்திமாவை பாராட்டிய சோஹைல் கான்!




சென்னை 15 அக்டோபர் 2026: ஜெனோபர் பாத்திமா இயக்கத்தில் துபாயை மையமாகக் கொண்டு உருவாகியிருக்கும் ஆந்தாலஜி தொடரான 'தி ரீல் ஃபைல்ஸ்' சீசன் 4-ன் அதிகாரப்பூர்வ டிரெய்லர் வெளியிடப்பட்டுள்ளது. இந்தத் தொடர், தொடக்கத்தில் குறும்படமாக திகில் கதைகளுடன் வெளியானது. தற்போது பலதரப்பட்ட பார்வையாளர்களைச் சென்றடையும் சினிமா ஆந்தாலஜி தொடராக வெளியாகிறது.

மூன்றாவது சீசனில் பாலிவுட் நடிகர் ராகுல் தேவ் இணைந்ததுடன், உளவியல் ஜானரில் கதைக்களமும் இருந்தது. இதன் தொடர்ச்சியாக வெளியாகவுள்ள நான்காவது சீசனில் அப்துல் ரொசக், இப்ராஹிம் அல் சமாதி, ஜெனோபர் பாத்திமா மற்றும் 'சாய் வித் அகமது' நிகழ்ச்சியின் மூலம் பிரபலமான அகமது அல் மர்சூகி ஆகியோர் நடித்துள்ளனர். இந்தத் தொடரை அப்ரா பர்ஹானா மற்றும் ஜெனோபர் பாத்திமா ஆகியோர் இணைந்து இயக்கியுள்ளனர்.

ஊடகத்துறையினர் மற்றும் சமூக வலைதளப் பிரபலங்கள் கலந்துகொண்ட டிரெய்லர் வெளியீட்டு நிகழ்வில், பாலிவுட் நடிகர் சோஹைல் கான் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். அப்போது அவர் படக்குழுவினருக்கும் டிரெய்லருக்கும் தனது வாழ்த்து தெரிவித்தார். மேலும், எதிர்காலத்தில் ஜெனோபர் பாத்திமாவுடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாகவும், நிகழ்வின்போது அளித்த பேட்டியில் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தொடர் குறித்து ஜெனோபர் பாத்திமா பகிர்ந்துகொண்டதாவது, "குறும்பட வடிவிலான கதைசொல்லலில் ஒரு எளிய முயற்சியாகத் தொடங்கிய இந்தப் பயணம், நான் ஆரம்பத்தில் கற்பனை செய்ததை விடப் பெரிய ஒன்றாக 'ளர்ந்துள்ளது.

ஒவ்வொரு சீசனும் புதிய முயற்சிகளை மேற்கொள்ளவும், பலருடன் இணைந்து பணியாற்றவும் எங்களது எல்லைகளை விரிவுபடுத்தவும் வாய்ப்பளித்துள்ளது" என்றார்.

நான்காவது சீசனில் புதிய கதைகளின் தொகுப்பு இடம்பெறவுள்ளது. இதில் முதல் கதையாக 'தி கான்ஜுர்' வெளியாகவுள்ளது. இந்தத் தொடரின் அதிகாரப்பூர்வ டிரெய்லர் தற்போது வெளியாகியுள்ள நிலையில், ஓடிடி தளம் மற்றும் வெளியீட்டுத் தேதி குறித்த அறிவிப்புகள் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## "'டோரதி' திரைப்படம் நான் எதிர்பார்த்திருந்த அங்கீகாரத்தை பெற்று தந்துள்ளது"- நடிகை ஜீவா சுப்பிரமணியம்!



சென்னை 15 அக்டோபர் 2026: தனது திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும் போதுதான் ஒரு கலைஞருக்கு உண்மையான மனநிறைவு ஏற்படுகிறது. அப்படியான மனநிறைவை 'டோரதி' திரைப்படம் திருநங்கை நடிகை ஜீவா சுப்பிரமணியத்துக்கு கொடுத்துள்ளது. திரைப்படங்கள் மற்றும் இணையத் தொடர்களில் பல்வேறு கதாபாத்திரங்களில் நடித்து வந்த ஜீவா, கார்த்திக் சுப்புராஜ் இயக்கிய 'டோரதி' படத்தில் தனது நடிப்புக்குக் கிடைத்துவரும் பாராட்டுகளால் நெகிழ்ச்சி யடைந்துள்ளார். ஒரு கதாபாத்திரத்துக்குக் கிடைத்த வரவேற்பு என்பதைத் தாண்டி, தனது பணியை மக்கள் கவனித்துப் பாராட்டுவதுடன் கொண்டாடவும் செய்கிறார்கள் என்ற உணர்வையும் நீண்டகாலம் அவர் எதிர்பார்த்திருந்த அங்கீகாரத்தையும் இந்தப் படம் அவருக்கு கொடுத்துள்ளது.

இதுபற்றி ஜீவா சுப்பிரமணியம் பகிர்ந்து கொண்டதாவது, "எனது நடிப்பை அங்கீகரித்து மக்கள் கொண்டாடுவதை முதல்முறையாக உணர்கிறேன். இத்தனை ஆண்டுகளாக இந்தத் தருணத்துக்காகக் காத்திருந்தேன். என் தம்பி கார்த்திக் சுப்புராஜ் மூலமாக அது இப்போது நடந்திருக்கிறது. எனக்கு இந்த வாய்ப்பு கொடுத்த இயக்குநர் மற்றும் ஒத்துழைப்பு கொடுத்த படக்குழுவினர் அனைவருக்கும் நன்றி.

கார்த்திக் சுப்புராஜ், ரிஷிகாந்த், சனந்த், கீர்த்தி சுரேஷ் மேடம் ஆகியோர் எங்கு சென்றாலும் என்னைப் பற்றி குறிப்பிடுகிறார்கள். என்னை 'ஜீவா அக்கா' என்று அன்போடு அழைக்கிறார்கள். அந்த அன்பும் ரசிகர்களின் ஆதரவும் எனக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. இந்த மகிழ்ச்சி, இன்னும் பத்து ஆண்டுகள் நான் தொடர்ந்து பயணிப்பதற்கான எனர்ஜி கொடுத்துள்ளது" என்றார்.

இதுவரை சுமார் 45 திரைப்படங்கள் மற்றும் இணையத் தொடர்களில் ஜீவா நடித்துள்ளார். 'ஆக்கம்', 'தாரை தப்பட்டை', 'தர்மதுரை', 'தர்பார்' உள்ளிட்ட திரைப்படங்களிலும், 'சுழல்', 'கையும் களவும்' உள்ளிட்ட இணையத் தொடர்களிலும் அவர் நடித்துள்ளார். தற்போது, 'டோரதி' திரைப்படத்தில் அவரது கதாபாத்திரம் பலரது கவனத்தை ஈர்த்துள்ளது. ஹைதராபாத், பெங்களூரு, கேரளா மற்றும் இந்தித் திரையுலகைச் சேர்ந்த நண்பர்கள், நலம் விரும்பிகள் எனப் பலரும் அவருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர். இது தனக்கு மனநிறைவையும் மகிழ்ச்சியையும் அளித்துள்ளதாக ஜீவா தெரிவிக்கிறார்.

'டோரதி' திரைப்படம் மூலம் கிடைத்துள்ள அங்கீகாரம், தொடர்ந்து முயற்சி செய்து முன்னேற வேண்டும் என்ற உறுதியையும் ஊக்கத்தையும் தனக்கு அளித்துள்ளதாக அவர் நம்புகிறார். அடுத்தடுத்து புதிய பட வாய்ப்புகளையும் எதிர்பார்த்துள்ளார். தன் மீது அன்பு காட்டிய இயக்குநர் கார்த்திக் சுப்புராஜுக்கும், அவரது இயக்கக் குழுவைச் சேர்ந்த விக்கி, கீர்த்தி, ஸ்ரீனிவாசன், பரத் ஆகியோருக்கும் ஜீவா தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துள்ளார். தான் மதிக்கும் நபர்களிடமிருந்து கிடைத்த இந்த அங்கீகாரமும் அன்பும், தனது வாழ்க்கையின் இந்தக் காலகட்டத்தை மிகவும் பொக்கிஷமானதாக மாற்றியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## கருணாஸ் மற்றும் வெற்றி நடிப்பில் உருவாகியுள்ள 'ரேவன்' திரைப்படத்தின் இறுதிக்கட்டப் பணிகள் தீவிரம்!



சென்னை 15, அக்டோபர் 2026: பொன்ஃபோர்ட் கிரியேட்டிவ் சொலுஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பில் செல்லமுத்து குப்புசாமி தயாரிக்கும் புதிய திரைப்படம் ரேவன். இப்படத்தின் தொடக்க விழா பூஜை சமீபத்தில் நடைபெற்றதைத் தொடர்ந்து, படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

ரேவன் படத்தில் நடிகர்கள் கருணாஸ் மற்றும் '8 தோட்டாக்கள்' வெற்றி முதன்மைக் கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். இவர்களுடன் வாணி போஜன், அனுமோல், ரவீணா, விஷ்வமித்ரன், 'ராட்சசன்' வினோத் சாகர், சரவணன் ஷக்தி, சுபத்ரா உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

சேதுராஜன் ராஜகோபால் மற்றும் ஆர்.வி. சரண் ஆகியோர் ஒளிப்பதிவாளர்களாகப் பணியாற்றுகின்றனர். வே. வெற்றிவேல் சந்திரசேகர் இப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார். இவர் சமீபத்தில் ஜியோ ஹாட்ஸ்டாரில் வெளியான 'ஆபிஸ்' வெப் தொடருக்கு கதை, திரைக்கதை மற்றும் வசனம் எழுதியவர். மேலும் 'பீட்ஷா 3' திரைப்படத்திற்கும் கதை, திரைக்கதை மற்றும் வசனம் எழுதியுள்ளார்.

படம் குறித்து இயக்குநர் வே. வெற்றிவேல் சந்திரசேகர் கூறியதாவது:

ரேவன் ஒரு க்ரைம் த்ரில்லர் திரைப்படம். எழுத்தாளர் நந்தன் ஸ்ரீதரன் எழுதிய படுகளக் காதை நாவலைத் தழுவி இப்படத்திற்கான கதையை உருவாக்கியிருக்கிறேன்.

குறிப்பாக, சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் சுமார் 30 கொலை மற்றும் பாலியல் வன்கொடுமை வழக்குகளுடன் தொடர்புடையதாகக் கூறப்பட்ட ஒரு தொடர் கொலையாளி கைது செய்யப்பட்ட உண்மைச் சம்பவத்தின் தாக்கமும் இந்தத் திரைக்கதையின் உருவாக்கத்தில் முக்கியப் பங்கு வகித்துள்ளது. அந்த உண்மைச் சம்பவத்தை அப்படியே பதிவு செய்யாமல், அதன் தாக்கத்தில் ஒரு விறுவிறுப்பான க்ரைம் த்ரில்லர் திரைக்கதையை உருவாக்கியிருக்கிறோம்.

இப்படத்தில் காக்கைக்கும் முக்கியப் பங்கு இருக்கிறது. காகத்தை நமது முன்னோர்களின் வடிவமாகப் பார்க்கும் நம்பிக்கை நமது பண்பாட்டில் நீண்டகாலமாக இருந்து வருகிறது. அந்த நம்பிக்கைக்கும் இந்தப் படத்தின் கதைக்கும் ஒரு முக்கியமான தொடர்பு இருக்கிறது.

கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் தொழில்நுட்பத்தின் உதவியுடன் காக்கையைத் தத்ரூபமாக உருவாக்கி, பயன்படுத்துகிறோம். இதைத் திரையில் பார்க்கும் போது வித்தியாசமான அனுபவமாக இருக்கும்.

க்ரைம் த்ரில்லருக்கான விறுவிறுப்பைத் தாண்டி, நமது சமூகத்தில் நீண்டகாலமாகப் புரையோடிப் போயிருக்கும் ஒரு முக்கியமான சமூகப் பிரச்னையையும் 'ரேவன்' அழுத்தமாகப் பேசுகிறது" என்றார்.

சென்னை, கோவை, ஈரோடு மற்றும் பல்லடம் உள்ளிட்ட பகுதிகளில் 'ரேவன்' படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. படப்பிடிப்பை விரைவில் நிறைவு செய்து, இந்த ஆண்டு இறுதியில் ரேவன் திரைப்படத்தைத் திரையரங்குகளில் வெளியிட படக்குழு திட்டமிட்டுள்ளது.

ரேவன் - தொழில்நுட்பக் குழு :

நடிகர்கள் : கருணாஸ், வெற்றி, வாணி போஜன், அனுமோல், ரவீணா, விஷ்வமித்ரன், 'ராட்சசன்' வினோத் சாகர், சுபத்ரா, சரவணன் ஷக்தி மற்றும் பலர்.

தயாரிப்பு: பொன்ஃபோர்ட் கிரியேட்டிவ் சொலுஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், தயாரிப்பாளர்: செல்லமுத்து குப்புசாமி, எழுத்து-இயக்கம்: வெற்றிவேல் சந்திரசேகர் வே, ஒளிப்பதிவு: சேதுராஜன் ராஜகோபால் & ஆர்.வி. சரண், படத்தொகுப்பு: சா.சிவப்பிரகாஷ், கலை இயக்கம்: வாசுதேவன், ஸ்டண்ட்: தினேஷ் காசி, மக்கள் தொடர்பு : ரியாஸ் கே அஹ்மத், பாரஸ் ரியாஸ், தயாரிப்பு நிர்வாகம்: கண்ணன் ஜி.

## சவுதியின் முக்கிய எண்ணெய் நிறுவனங்கள் மீது மீண்டும் தாக்குதல்




சென்னை 15, அக்டோபர் 2026: சவுதி அரேபியாவில் உள்ள உலகின் மிகப் பெரிய எண்ணெய் நிறுவனமான 'அராம்கோ'வின் தலைமையகம் மீது ஹவுதி பயங்கரவாதிகள் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளனர்.

மேற்காசிய நாடான ஏமனில் இருந்து செயல்படும், ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி பயங்கரவாத அமைப்பு, சவுதி அரேபியா மீது தாக்குதல்களை நடத்தி வருகிறது.

ஏமனுக்கு ஆதரவாக சவுதி அரேபியா நடத்திய தாக்குதல்களுக்கு பதிலடியாக, ஹவுதி தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருகிறது.

குறிப்பாக, சவுதி அரேபியாவின் விமான நிலையங்கள், எண்ணெய் கிணறுகள் ஆலைகள் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது.

இதன் தொடர்ச்சியாக, நேற்று முன்தினம் நள்ளிரவு சவுதி அரேபியாவின் முக்கிய எண்ணெய் நிறுவனமான 'அராம்கோ'வின் தலைமையகம் மீது, ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் நிறுவனத்தின் மூத்த தலைமை அதிகாரிகள் பயன்படுத்தும் கட்டடத்தின் மேல் மூன்று தளங்கள் கடுமையாக சேதமடைந்துள்ளன. அதிர்ஷ்டவசமாக இதில் யாரும் உயிரிழக்கவில்லை.

தலைநகர் ரியாத் உட்பட முக்கிய நகரங்களில் தாக்குதல் தொடர்ந்து வரும் நிலையில், சவுதி ராணுவக் கூட்டுப்படைகள் பல ஏவுகணைகள், ட்ரோன்களை இடைமறித்து அழித்ததாகக் கூறப்படுகிறது.

அந்த ஏவுகணை பாகங்கள் ரியாத்தின் குடியிருப்புப் பகுதிகளில் விழுந்ததில் ஒரு குழந்தை உட்பட 4 பேர் காயமடைந்தனர்; 15 வீடுகள் சேதமடைந்தன.